ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477438 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2023.03.03 |

**நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 02 – 2023 மாச்சு**

**இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துகின்றது**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2023 மாச்சு 03ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் 2023 மாச்சு 03ஆம் நாள் வியாபார முடிவிலிருந்து முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

அசாதாரணமாக உயர்வாகவுள்ள பணவீக்கம் மற்றும் பணவீக்க எறிவுகளினையும் குறுங்காலத் தோற்றப்பாட்டினையும் சூழவுள்ள உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் இலங்கை மத்திய வங்கியும் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களும் நாணயக்கொள்கை நிலைப்பாடு தொடர்பாக ஆழமான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்துள்ளனர். இலங்கை மத்திய வங்கிக்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களுக்கும் மத்தியில் பணவீக்கத் தோற்றப்பாடு தொடர்பிலான சில வேறுபாடுகள் காணப்பட்டுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினை இறுதிப்படுத்தி முன்னோக்கி நகர்வதற்கு அனைத்து ‘முன்கூட்டிய நடவடிக்கைகளினையும்’ பூர்த்திசெய்வதன் அவசியத்தினைக் கருத்திற்கொண்டு, ஆரம்பப் பேச்சுவார்த்தைக் கட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட சீராக்கங்களுடன் ஒப்பிடுகையில் சிறியதோர் அளவில் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கான இணக்கப்பாட்டினை நாணயச் சபையும் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் எட்டினர்.

பொருளாதாரத்தின் பல்முனைகளிலும் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் பின்தொடரப்படுகின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மீதான இலங்கையின் கடப்பாட்டினை வெளிப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினை இறுதிப்படுத்துவதானது அனைத்து ஆர்வலர்களுக்கும் நன்மையளிப்பதுடன் நம்பிக்கையினையும் வலுவூட்டுமென்பதுடன் இது நீடித்து நிலைத்திருக்கும் அடிப்படையில் பொருளாதாரத்தில் உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதில் துணைபுரியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது எதிர்வரும் காலப்பகுதியில் அதிகளவிலான வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களுக்கு ஊக்கமளிப்பதுடன் அது தற்பொழுது நிலவிவருகின்ற பொருளாதார நெருக்கடிகளைக் கடந்துவருவதற்குப் பொருளாதாரத்திற்குத் துணைபுரியும். பிரமாண்டமான தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் பொருளாதாரமானது மிகவும் கடினமான மற்றும் முன்னெப்பொழுதுமில்லாதவாறான காலங்களினூடாக ஏற்கனவே திரும்பியிருப்பதாக சபை கருத்திற்கொள்வதுடன் இன்றைய தீர்மானமானது எதிர்பார்க்கப்பட்டதனைப் பார்க்க விரைவாக பணவீக்கத்தின் குறைவடைதலுக்கு வழியமைக்குமெனவும் உறுதியாக நம்புகின்றது.

இந்த நாணயக்கொள்கைத் தீர்மானமானது கொள்கை வட்டி வீதங்களுக்கும் உயர்வான சந்தை வட்டி வீதங்களுக்குமிடையிலான வீச்சினைக் குறைக்குமென நாணயச் சபை எதிர்பார்க்கின்றது. படுகடன் சீர்திருத்த செய்முறை முன்னேற்றமடைகின்ற போது இடர்நேர்வு மிகையின் குறைவடைதலினைப் பிரதிபலித்து எதிர்வரும் காலத்தில் சந்தை வட்டி வீதங்களின், விசேடமாக அரச பிணையங்களின் விளைவுகளின், குறைவுடன் இவ்வீச்சானது மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து ஆர்வலர்களையும் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் இருக்குமாறும் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றினை உறுதிப்படுத்துவதில் அதன் கடப்பாட்டினையும் சபை மீள்வலியுறுத்துவதுடன் அதன்மூலம் எதிர்வரும் காலப்பகுதியில் விலை அழுத்தங்கள் போதுமானளவில் மட்டுப்படுத்தப்பட்டவுடன் உடனடியாக வட்டி வீதக் கட்டமைப்பு வழமைக்குக் கொண்டுவரப்படுமெனவும் நிச்சயப்படுத்துகின்றது.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நியதி ஒதுக்கு வீதங்கள் மாற்றமடையவில்லை**<br>(2023 மாச்சு 03ஆம் நாள் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்கு வரும்) | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 15.50% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 16.50% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2023 மாச்சு 03ஆம் திகதி பி.ப 4.45 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2023 ஏப்பிறல் 04ஆம் நாளன்று வெளியிடப்படும்.

**இணைப்பு I**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | யூன் 22 | யூலை 22 | ஓக 22 | செத் 22 | ஒத் 22 | நவெ 22 | திசெ 22 | | சன 23 | பெப் 23 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 54.6 | 60.8 | 64.3 | 69.8 | 66.0 | 61.0 | 57.2 | கொநுவிசு (2021=100) | 51.7 | 50.6 |
| | தேநுவிசு (2013=100) | 58.9 | 66.7 | 70.2 | 73.7 | 70.6 | 65.0 | 59.2 | தேநுவிசு (2021=100) | 53.2 | |
| **மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 39.9 | 44.3 | 46.6 | 50.2 | 49.7 | 49.4 | 47.7 | கொநுவிசு (2021=100) | 45.6 | 43.6 |
| | தேநுவிசு (2013=100) | 49.3 | 57.3 | 60.5 | 64.1 | 62.4 | 60.1 | 57.5 | தேநுவிசு (2021=100) | 52.0 | |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மே 22 | யூன் 22 | யூலை 22 | ஓக 22 | செத் 22 | ஒத் 22 | நவெ 22 | திசெ 22 | சன 23 |
| ஒதுக்குப் பணம் | 1,415 | 1,453 | 1,436 | 1,386 | 1,379 | 1,342 | 1,318 | 1,349 | 1,590 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 11,897 | 11,901 | 11,955 | 11,987 | 12,051 | 12,046 | 12,163 | 12,290 | 12,322 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (2,083) | (2,122) | (2,124) | (2,035) | (1,893) | (1,873) | (1,870) | (1,767) | (1,573) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 13,980 | 14,023 | 14,079 | 14,022 | 13,944 | 13,919 | 14,033 | 14,056 | 13,895 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 6,523 | 6,697 | 6,826 | 6,990 | 7,043 | 7,178 | 7,293 | 7,471 | 7,612 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,750 | 1,729 | 1,754 | 1,700 | 1,703 | 1,778 | 1,760 | 1,747 | 1,748 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,755 | 7,714 | 7,673 | 7,614 | 7,577 | 7,530 | 7,499 | 7,414 | 7,318 |
| விரிந்த பணம் ($M_4$) | 14,340 | 14,335 | 14,410 | 14,451 | 14,540 | 14,547 | 14,676 | 14,840 | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | செத் 22 முடிவில் | ஒத் 22 முடிவில் | நவெ 22 முடிவில் | திசெ 22 முடிவில் | சன 23 முடிவில் | பெப் 23 முடிவில் | 23 மாச்சு 03 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50 | 14.50 | 14.50 | 14.50 | 14.50 | 14.50 | 15.50 (அ) |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 15.50 | 15.50 | 15.50 | 15.50 | 15.50 | 15.50 | 16.50 (அ) |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 15.50 | 15.50 | 15.50 | 15.50 | 15.26 | 15.27 | 15.50 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 31.94 | 33.05 | 32.91 | 32.64 | 29.91 | 29.72 | 29.59 (ஆ) |
| 182-நாள் | 30.59 | 32.53 | 32.27 | 32.20 | 28.72 | 28.67 | 28.64 (ஆ) |
| 364-நாள் | 29.85 | 29.60 | 29.46 | 29.27 | 27.78 | 27.67 | 27.64 (ஆ) |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 25.95 | 27.46 | 27.89 | 27.24 | 24.82 | 23.45 | 23.45 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 17.58 | 17.94 | 18.42 | 18.70 | 18.66 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 24.93 | 25.83 | 26.04 | 26.20 | 25.82 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 11.63 | 12.60 | 13.37 | 14.06 | 14.63 | 14.74 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 15.41 | 16.66 | 17.59 | 18.49 | 19.15 | 19.23 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 22.06 | 23.22 | 23.63 | 23.07 | 22.24 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 22.55 | 23.61 | 24.05 | 23.73 | 22.78 | - | - |

(அ) 2023 மாச்சு 03 அன்று வியாபார முடிவடைவதிலிருந்து நடைமுறைக்கு வரும்

(ஆ) 2023 மாச்சு 01 அன்று நடைபெற்ற ஏலவிற்பனை வீதம்

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*